[26th February 1966

***118 கேள்வி.—திரு. எ. கோபாலகிருஷ்ணன் :** கனம் உள் துறை அமைச்சர் 3—11—1965-ல் கேள்வி எண் 247-க்கு அளித்த பதிலையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் 31—3—1965 தேதியுடன் முடிவடைந்த காலாண்டுவரை நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த நான்கு விதைப் பண்ணைகள் யாவை ?

(இ) வானூர் விதைப்பண்ணை ஆண்டு ஒன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய் நஷ்டத்தில் இயங்குகிறது என்பது உண்மையா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) குப்பநத்தம் விதைப்பண்ணை நான்கு பிரிவுகளைக் கொண்டது. இதன் மொத்த நிலப் பரப்பு 101.47 ஏக்கராவாகும். இந்த விதைப் பண்ணை 31—3—1965 தேதி வரை நஷ்டத்திலேயே நடந்து வந்துள்ளது. 1965-66-ம் ஆண்டுக் குரிய கணக்குகள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

(இ) இல்லை.

(a) The farm at Kuppanatham consisting of four units and measuring 101.47 acres in all was functioning on a loss up to the period ended 31st March 1965. The accounts for 1965-66 are yet to be finalised.

(b) No, Sir.

திரு. எ. கோபாலகிருஷ்ணன் : இந்த குப்பநத்தம் விதைப் பண்ணை நான்கு பிரிவுகளைக் கொண்டது என்று சொல்கிறார்கள். இந்த நான்கு பிரிவுகளின் விஸ்தீரணம் 101 எக்கர்கள் என்றும் சொன்னார்கள். இந்த 101 எக்கரும் சர்க்கார் புறம்போக்கு நிலங்களா ? அதில் அந்தப் பண்ணை நிறுவனம் செய்யப்பட்டதா ? அல்லது விவசாயிகளிடம் இருந்து அந்த நிலங்கள் எடுத்துக் கொள்ளப் பட்டனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : சில நிலங்களை அக்வயர் செய்துதான் எடுத்துக் கொள்கிறார்கள்.

திரு. கே. எ. மதியழகன் : பத்து ஆண்டுகளாக நடைபெறுகிற 272 விதைப் பண்ணைகளில் 114 பண்ணைகள் 11½ லட்சம் ரூபாய் நஷ்டம் அடைந்து மூடப்பட்டுவிட்டன. மீதியுள்ள 158 பண்ணைகளில் 58 பண்ணைகள் ஆரம்பம் முதலே நஷ்டத்தில் நடந்து கொண்டு வருகின்றன. இப்பண்ணைகளைப் பொறுத்த வரையில் இதற்கு யார் காரணம் ? அதிகாரிகள் என்ன தவறு செய்திருக்கிறார்கள் ? அவர்களைக் கண்டு பிடித்து தண்டனை கொடுக்கவேண்டுமென்று பொதுக் கணக்குக் குழு கூறி நான்கு வருடங்கள் ஆயிற்று. அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ? அதுபற்றிய விவரங்கள் என்ன ? அப்படி இல்லை என்றால் அதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் ரொம்ப விவரங்களை அறிய விரும்புகிறார்கள். அதற்காகத் தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்கிறேன்.

26th February 1966]

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, வானூர் விதைப் பண்ணை ஆண்டு ஒன்றுக்குப் பத்தாயிரம் ரூபாய் நஷ்டத்தில் இயங்குகிறதா என்றால் இல்லை என்று கூறியிருக்கிறார்கள் அதை, '10,000 ரூபாய் நஷ்டம் ஏற்படவில்லை' என்று பொருள் கொள்வதா அல்லது 'நஷ்டமே ஏற்படவில்லை' என்று பொருள் கொள்வதா ?

கனம் திரு. பூ. கக்கன் : வானூர் பண்ணையைப் பொறுத்த வரையில் லாபத்தில்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. குப்ப நத்தத்தைப் பொறுத்த வரையில் 1963-64-ல் நாலாயிரம் சொச்சம் ரூபாய் நஷ்டத்தில் ஓடியிருக்கிறது. 1964-65-ல் 600 சொச்சம் ரூபாய் நஷ்டத்தில் ஓடியிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆளும் கட்சிக்காரர்கள், அமைச்சர்களின் உறவினர்கள் ஆகியவர்களின் நிலங்களை எடுத்துக் கொண்ட காரணத்தினால் இப்படிப்பட்ட விதைப் பண்ணைகள் இந்தமாதிரியாகப் பரிசிலனை செய்து நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டை அமைச்சர் அவர்கள் மறுக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆளும் கட்சிக்காரர்கள் விவசாயிகளாக இருந்தால் விதைப் பண்ணைகள் வேண்டுமென்று எடுத்தால் அது தப்பிதமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. மா. தண்டாயுதபாணி : விதைப் பண்ணைகள் வைத்து நடத்துவதில் லாப நஷ்டக் கணக்கு பார்க்காவிட்டாலும்கூட, செலவு செய்கிற அளவிற்கு அதில் எதிர்பார்க்கிற உற்பத்தி இல்லை. இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. குறிப்பாக, பணி புரிகிறவர்கள் பொறுப்போடு பணியாற்றாத காரணத்தினால்தான் எதிர்பார்த்த அளவு லாபம் கிடைக்கவில்லை என்று பொதுவாக ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. இதை மாற்றுவதற்காக அதில் பணி புரிகிறவர்களுக்கு உற்பத்தி அடிப்படையில் சம்பளம் நிர்ணயிப்பதாக இருந்தால் அவர்களுக்கு ஆர்வம் அதிகமாக இருக்கும். பொறுப்பும் அதிகமாக இருக்கும். ஆகவே அந்த அடிப்படையில் அவர்களுக்கு சம்பளம் நிர்ணயம் செய்ய அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : உற்பத்தி செய்கிற அடிப்படையில் சம்பளம் கொடுப்பது என்ற கொள்கை அரசாங்கத்திற்கு இல்லை.

MR. SPEAKER : Let us pass on to the next question.

SRI K. A. MATHIALAGAN : Sir, I want to put one more supplementary.

MR. SPEAKER : The hon. Member has already put two supplementaries.

SRI K. A. MATHIALAGAN : I may be allowed to put one more supplementary question. This is a very important question Sir. The Hon. Minister has made an allegation against me.

[26th February 1966

MR. SPEAKER : The hon. Member can reply to it in some other form and not by putting a supplementary question.

SRI K. A. MATHIALAGAN : On a point of order, Sir. I request you, Sir, to allow an half-hour debate on this.

MR. SPEAKER : I am not going to allow any debate now.

SRI K. A. MATHIALAGAN : I am not debating, Sir. The Hon. Minister has said "Because they belong to the ruling party, is it wrong to take their lands for Seed Farm?"

அப்படித்தான் சொன்னார்கள். இவர்களுக்குச் சொந்தமானது, நாசரத் பேட்டையில் இம்மாதிரி தவறாக நடந்திருக்கிறது. அது குற்றம் இல்லை என்று சொல்லமுடியுமா?

MR. SPEAKER : I may tell the hon. Member Sri K. A. Mathialagan that I am not going to allow him to raise any debate. The hon. Member is talking about the facts of the case. I am not going to allow that. The hon. Member can bring in a separate motion or give notice of a separate question later. I am not going to allow any debate now.

SRI K. A. MATHIALAGAN : I demand an half-hour debate on this matter.

MR. SPEAKER : I will consider the hon. Member's request.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் இதன் பேரில் அரை மணி நேர விவாதம் வேண்டும் என்று கேட்கிறார்கள். பட்ஜெட் விவாதத்திற்காக ஆறு நாட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நாட்களில் இதைப்பற்றிப் பேசலாம். ஆகவே, இப்போது இதற்காக அரை மணி நேரம் விவாதத்திற்காக ஒதுக்கவேண்டும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, தென்னாற்காடு ஜில்லாவைப்பற்றி கேட்கப்பட்டது. அவற்றில் இருக்கின்ற பண்ணைகள் எல்லாம் நஷ்டத்தில் ஓடவில்லை . . .

திரு. கோ. சி. மணி : தாங்கள் இது சம்பந்தமான கேள்வியை முடித்து அடுத்த கேள்விக்குச் சென்ற பின்னால் அமைச்சர் அவர்கள் இதைச் சொல்வது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : When I permit the Hon. Minister, he can speak.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்களே, உங்கள் அனுமதியோடு இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். தென்னார்க்காடு ஜில்லாவில் கீழ்க்கண்ட இடங்களில் லாபத்தில்தான் ஓடுகின்றன. வானூரில் ரூ. 4,957 லாபத்தில் ஓடுகின்றது. காக்குப்பம் ரூ. 15,481 லாபத்தில் ஓடுகிறது. இருவேல்பேட்டை ரூ. 2,020 லாபத்தில் ஓடுகிறது. வெல்லப்பாக்கம் ரூ. 6,261 லாபத்தில் ஓடுகிறது. வண்டராயப்பேட்டை ரூ. 15,217 லாபத்தில் ஓடுகிறது.

26th February 1966]

(சில கனம் அங்கத்தினர்கள் : நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லலாமே.)

கனம் சபாநாயகர் : இங்கிலீஷிலிருந்து மொழிபெயர்ப்பு அப்படியிருக்கிறது.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்கள் சொன்னது போல் டிரான்ஸ்லேஷன் தான். மிராஹூர் ரூ. 6,526 லாபத்தில் ஓடுகிறது. வடக்கநந்தல் ரூ. 6,758 லாபத்தில் ஓடுகிறது. குப்ப நத்தம் மட்டும் ரூ. 643 நஷ்டத்தில் இருக்கிறது. மற்ற இடங்கள் எல்லாம் லாபத்தில் தான் ஓடுகின்றன.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விதைப் பண்ணைகள் எல்லாம் லாபத்தில் தான் ஓடிக் கொண்டிருக்கின்றன என்றும், நஷ்டத்தில் ஓடுவது ஒன்றே ஒன்று தான் என்றும் குறிப்பிட்டார்கள். அப்படியானால் இந்த விதைப் பண்ணைகள் மூலம் எத்தனை ஏக்கர்கள் பயிர் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவிக்க முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

விவசாயப் பள்ளிகள்

* 119 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள விவசாயப் பள்ளிகளின் விபரம் என்ன, மாவட்டவாரியாக?

THE HON. SRI P. KAKKAN : There are eleven Agricultural Schools functioning in this State as indicated below :--

Names of places and districts.

1. Paramakudi, Ramanathapuram.
2. Bhavanisagar, Coimbatore.
3. Karaiyiruppu, Tirunelveli.
4. Sakkottai, Thanjavur.
5. Kakuppam, South Arcot.
6. Papparapatti, Dharmapuri.
7. Sirukaveripakkam, Chingleput.
8. Thiruvarankulam, Tiruchirappalli.
9. Muzhucode, Kanyakumari.
10. Ootacamund, The Nilgiris.
11. Katpadi, North Arcot.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த விவசாயப் பள்ளிகளில் விவசாயம் சம்பந்தப்பட்ட பாடங்கள் மட்டும் சொல்லிக்கொடுக்கப் படுகின்றனவா? அல்லது, வேறு பாடங்களோடு இணைந்து விவசாயப் பாடங்களும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றனவா?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய சம்பந்தமான பாடங்கள் தான் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS